# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1077/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | டோரா அருள்செல்வி | -- | |
| Husband's Name | கோபாலகிருஷ்ணன் | Calling | உதவி இயக்குநர்–II |
| Village | தூத்துக்குடி | Religion | |
| Taluk | தூத்துக்குடி | Age | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of November 2025.

**Accused absent. Petition filed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது விருதுநகர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், துணை இயக்குநர் –II அலுவலகத்தில் உதவி இயக்குநர் –II ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி அலுவலகத்தில் பணிக்கு வருவதற்கு முன்பே அ.சா.1 திருமதி. சுசீலா அவர்கள் துணை இயக்குநர் –II ஆக மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். 19.09.2024 ம் தேதி செவல்பட்டியில் உள்ள ஸ்ரீலட்சுமி பயர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸில் மரண விபத்து ஏற்பட்டது தொடர்பாக எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அன்றைய தினமே அ.சா.1 உடன் நானும் எங்களுடைய அலுவலக வாகனத்தில் மேற்படி தொழிற்சாலைக்கு சென்று அ.சா,1 அவர்கள் மேற்படி தொழிற்சாலையை ஆய்வு மேற்கொண்டார். நான் அவருடன் உதவியாக இருந்தேன். மேற்படி தொழிற்சாலையை பார்வையிட்ட போது அறை எண்.1 முழுவதுமாக எரிந்து தரைமட்டமாக இருந்தது. தீயணைப்புத்துறை அலுவலர்கள் சிலரும் அங்கு இருந்தனர். தொழிற்சாலையை சார்ந்த யாரும் அங்கு இல்லை. இடிபாடுகளுக்கு இடையில் ஒரு ஆட்டோவும் இருந்தது. அங்கிருந்த தீயணைப்புத் துறையினரிடம் கேட்டபோது கோவிந்தராஜ் என்ற ஆட்டோ டிரைவர் மேற்படி இடிபாடுகளுக்கு இடையே சிக்கி இறந்துபோய்விட்டதாக தெரிவித்தார்கள். மற்றொரு தொழிலாளியான பின்னர் பெயர் விசாரித்து தெரிந்து கொண்ட குருமூர்த்தி என்பவரை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாக தெரிந்து கொண்டோம். மேற்படி துணை இயக்குநர் அவர்கள் தொழிற்சாலை முழுவதையும் ஆய்வு மேற்கொண்டார். மேற்படி விபத்தானது அன்று காலையிலேயே நடந்துள்ளதாலும், முந்தையநாள்

இருப்பிலுள்ள வேதி மருந்துப் பொருட்கள் அந்த அறையில் இருப்பு வைக்கப்பட்டிருந்ததாலும் தொழிலாளி குருமூர்த்தி என்பவர் மேற்படி அறையை திறக்கும்போது வேதிவினை புரிந்து அங்கிருந்த மருந்துப்பொருட்கள் வெடித்து விபத்து ஏற்பட்டதாகவும் தெரியவந்தது. அதன் பின்னர் நாங்கள் அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். பின்னர் மறுநாள் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு நாங்கள் சென்று பார்க்கும்போது சிகிச்சையில் இருந்த குருமூர்த்தி உடல் முழுவதும் தீக்காயத்துடன் இருந்தார், துணை இயக்குநர் அவர்கள் விசாரித்த போது அவர் அ.சா.ஆ.6 ல் கூறியுள்ள சங்கதிகளையே தெரிவித்தார். அதை அ.சா.1 அவர்களே பதிவு செய்தார்கள். அ.சா.1 அவர்கள் குருமூர்த்தியிடம் கேட்டுச் சொல்லச்சொல்ல நான் எழுதினேன். பின்னர் மருத்துவரிடமும் மேற்படி குருமூர்த்தியின் உடல்நிலையை கேட்டுத் தெரிந்து கொண்டோம். பின்னர் இது சம்மந்தமாக துணை இயக்குநர் அவர்கள் தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் திரு.பாலமுருகன் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டார்கள். மேற்படி தொழிற்சாலைக்கு துணை இயக்குநர் –II அலுவலகம் மூலம் திரு.பாலமுருகன் அவர்களுக்கு காரணம் கோரும் அறிவிப்பு தபாலை அனுப்பிவைத்தோம். மேற்படி தபாலானது பாலமுருகனுக்கு சார்வு செய்யப்படாமல் திரும்ப வந்துள்ளது. மேற்படி தபால் **அ.சா.ஆ.12** ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் என்பவருக்கு சிவகாசி அரசு மருத்துவர் அவர்கள் பிரேத பரிசோதனை மேற்கொண்டுள்ளார் அவர் வழங்கிய மேற்படி கோவிந்தராஜ் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையின் உண்மை நகல் **அ.சா.ஆ.13** ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன குருமூர்த்தி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையின் உண்மை நகல் **அ.சா.ஆ.14** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்துப் பற்றிய தகவல் இணை இயக்குநருக்கு தொலைபேசி மூலமாக கிடைக்கப்பெற்று அவர் மூலமாக எனக்குத் தெரிந்தது. எனக்கு துணை இயக்குநர் இவ்வாறு விபத்து நடந்திருப்பதாகவும் நாம் ஆய்வுக்குச் செல்லவேண்டும் என்று கூறினார். காலை 10.45 மணிக்கு அவ்வாறு தகவல் கிடைத்து 10 நிமிடத்தில் கிளம்பிவிட்டோம். தொழிற்சாலையின் கோப்பு மற்றும் வரைபடம் எடுத்துச் சென்றோம். அலுவலக கார் மூலமாகத்தான் சென்றோம். எங்களது அலுவலகத்திலிருந்து அத்தொழிற்சாலை சுமார் 40 கி.மீ இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு செல்லும்போது சுமார் 12 மணி இருக்கும். அப்போது அங்கு தீயணைப்புத்துறையினர் மட்டும் இருந்தார்கள். காவல் அதிகாரிகள் இல்லை. அ.சா.ஆ.7 புகைப்படங்களை தீயணைப்புத்துறையினர் அ.சா.1 ன் கைபேசிக்கு அனுப்பினார்கள். நான் எடுத்த புகைப்படங்களை பயன்படுத்தவில்லை. தொழிற்சாலையை சேர்ந்தவர்கள் அங்கு யாரும் இல்லை. மேற்படி தொழிற்சாலையை எங்கள் துறையினரால் அதற்கு முன்பு எப்போது ஆய்வு செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஆய்வின் போது விதிமீறல்கள் அதிகமாக இருப்பது தெரியவந்தால் பிரிவு 40(2)ன் படி தடையாணை பிறப்பிப்பது வழக்கம். அப்படித் தடையாணை எதுவும் அத்தொழிற்சாலைக்கு 15

ஆண்டுகளாக வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 15 ஆண்டுகள் தடையாணை பிறப்பிக்கவில்லை என்றால் அது அத்தொழிற்சாலையின் நன்மதிப்பைக் காட்டுகிறது என்று சொன்னால் எடுத்துக்கொள்ளலாம். தொழிற்சாலை முழுவதையும் மற்றும் இடிந்துபோன வேதிக்கலவை அறையையும் ஆய்வு செய்தோம். அத்தொழிற்சாலையில் மொத்தம் 10 க்கும் அதிகமான அறைகள் இருந்தன. அந்த விபத்து வேதிக்கலவை அறையில் காலை நேரத்தில் நடந்திருந்ததால் முதல்நாள் வேதிக்கலவையை மீதம் வைத்துவிட்டு சென்றதால் தான் ஏற்பட்டிருக்கும் என்று அனுமானிக்க முடியும். விபத்து ஏற்பட்ட அறையில் 100 சோர்சா வளையங்கள் இருந்தன. அந்த வளையம் அலுமினியத்தால் செய்யப்பட்டது. அலுமினியம் நெருப்பில் உருகுமா என்றால் உருகும். விபத்து நடந்த இடத்தில் மண் எடுத்து ஆய்வு செய்யவில்லை. மண்ணை எடுத்து ஆய்வுக்கு அனுப்பியிருந்தால் வேதிக்கலவை அன்றையதினம் தயார் செய்யப்பட்டதா அல்லது முதல்நாள் தயார் செய்யப்பட்டதா என்பது தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. குருமூர்த்தியிடம் வாக்குமூலம் வாங்கும்போது அவரின் உடல்நிலையைப் பற்றி மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம். மேற்படி நபரிடம் வாக்குமூலம் வாங்கக் போகும்போது மருத்துவர் இல்லை, அதனால் குருமூர்த்தியிடம் வாக்குமூலம் வாங்கி விட்டு மருத்துவரைப் பார்த்தோம். குருமூர்த்தி வாக்குமூலம் கொடுக்க தகுதியுடன் உள்ளாரா என்று மருத்துவரிடம் சான்றிதழ் வாங்கினோமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மருத்துவரிடம் முன்னரே கேட்டிருந்தால் குருமூர்த்தி வாக்குமூலம் கொடுக்க தகுதியான மனநிலையில் இல்லை என்று கூறியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. குருமூர்த்திக்கு 100% தீக்காயங்கள் இருந்தது. துணை இயக்குநர் விபத்துக்குறித்துக் கேட்டவுடன் குருமூர்த்தி வரிசையாக நடந்ததை சொன்னார். அவருக்கு 100% தீக்காயங்கள் இருந்தாலும் நடந்த விபத்துப் பற்றி கொஞ்சம், கொஞ்சமாக சொல்லிவிட்டார். துணை இயக்குநர், குருமூர்த்தியிடம் வாக்குமூலம் வாங்கும்போது நானும், குருமூர்த்தியின் இரண்டு சகோதரிகளும் மட்டுமே இருந்தோம். குருமூர்த்தி வாக்குமூலம் கொடுத்ததை ஒலிப்பதிவிறக்கம் செய்யவில்லை. குருமூர்த்தி வாக்குமூலம் கொடுக்கும் மனநிலையில் இல்லை என்றும், அதனால் நாங்களாகவே வாக்குமூலத்தை உற்பத்தி செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. 100% தீக்காயம் அடைந்தவர்கள் கண்டிப்பாக பிழைக்கமாட்டார்கள். குருமூர்த்தி இறந்ததேதி 24.09.2024 ஆகும். நாங்கள் வாக்குமூலத்தை வாங்கிய தேதி 20.09.2024 ஆகும். குருமூர்த்தியின் வாக்குமூலத்தை ஊர்ஜிதப்படுத்த அவரின் சகோதரிகளிடம் கையொப்பம் வாங்கினோம். அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. அவர்களை சாட்சியாக விசாரித்தால் அவர்கள் இல்லாமல் தனிப்பட்ட முறையில் வாக்குமூலத்தை பெற்றுக்கொண்டு பின்னர் அவர்களிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டோம் என்பது தெரிந்துவிடும் என்று சொன்னால் சரியல்ல. குருமூர்த்தி இறந்துவிடும் சூழ்நிலையில் அவரிடம் மரணவாக்குமூலம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஏன் வாங்கவில்லை என்றால் எனக்கு அச்சமயத்தில் முன் அனுபவம்

இல்லை. எங்கள் மேலதிகாரிகளிடம் பணி செய்தோம் என்பதைக் காட்டுவதற்காக பொய்யாக நாங்களாகவே இவற்றை உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள ஆட்டோ தொழிற்சாலைக்குச் சொந்தமான ஆட்டோவா என்று நாங்கள் விசாரிக்கவில்லை. குருமூர்த்தியின் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள பொன்னுச்சாமியை நாங்கள் அழைத்து விசாரிக்கவில்லை. அவரது தொடர்பு எண் கிடைக்காததால் விசாரிக்கமுடியவில்லை. குருமூர்த்தியின் கைபேசி அழைப்புகளை ஆய்வு எதுவும் செய்யவில்லை. விபத்து நடந்த அறை வேதிக்கலவை அறை ஆகும். அந்த அறையில் உற்பத்தி செய்யவேண்டிய பட்டாசுக்கான வேதிப்பொருட்களை கலப்பது தான் அங்கு பணியாகும். அவற்றை நிரப்புவதற்கு தனியான அறைகள் உள்ளன. வேதிக்கலவை அறையில் பூச்சட்டி மற்றும் சங்கு சக்கரம் எப்படி வந்தது என்றால் அது தொழிற்சாலையின் மேலாளர் மற்றும் தொழிலாளர்களைப் பொறுத்தது, அது எவ்வாறு வந்தது என்று நாங்கள் விசாரிக்கவில்லை. உண்மையான புலன் விசாரணை செய்யவேண்டுமென்று கருதினால் உரிய சட்ட நடவடிக்கையின் மூலம் தொழிற்சாலையை சேர்ந்த நபர்களை விசாரித்து இருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. தொழிற்சாலையின் போர்மென் என்பவர் அன்றைய உற்பத்திக்கான வேதிப்பொருட்களை கலந்து எடுத்து தொழிலாளர்களுக்கு பணி ஒதுக்கி தொழிலாளர்களை கண்காணிப்பதாகும். தொழிலாளர்களுக்கு வேதிப்பொருட்களை எடை போட்டு எடுத்து தரவேண்டியது போர்மெனின் கடமையாகும். போர்மேனுக்கு மத்திய அரசாங்கத்தில் PESO அமைப்பின் மூலமாக உரிய பயிற்சி மற்றும் எழுத்துத்தேர்வு, செய்முறைத்தேர்வு அனைத்தும் நடத்தி சான்றிதழ் வழங்குவார்கள் என்றால் சரிதான். தொழிற்சாலையில் சல்பர் வேதிப்பொருளின் இருப்புக்குறித்து இருப்புப்பதிவேடு பராமரிக்க வேண்டும். வேதிப்பொருட்களிலிருந்து அன்றையதினம் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, எவ்வளவு மீதம் இருந்தது அதை என்ன செய்தோம் என்பது குறித்து பதிவேடு பராமரிக்கவேண்டும் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. Finishing stock note தொழிற்சாலையில் பராமரிக்கவேண்டும் என்றால் அவ்வாறு சட்டம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. தொழிற்சாலையின் அனைத்து அறைகளின் கதவைத் திறப்பது போர்மெனின் பணியாகும். கந்தக இருப்புப் பதிவேட்டையும், உற்பத்தி முடிவு இருப்புப் பதிவேட்டையும் ஆய்வு செய்தோமா என்றால் துணை இயக்குநரைத்தான் கேட்க வேண்டும். அந்த ஆவணங்களை நான் குறியீடு செய்யவில்லை. நான் துணை இயக்குநர் ஆய்வு செய்யும் போது உடன் இருந்தேன், நான் தன்னிச்சையாக எந்தப் பணியும் செய்யவில்லை. வேதிக்கலவை அறையில் சல்லடை கீழே விழுந்தால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. வேதிக்கலவையில் பல்லி எச்சமோ, கல்லோ விழுந்தால் வெடிக்கும். கதவைத் திறக்கும்போது ஆணி கழன்று விழுந்து மருந்துக்கலவையில் பட்டதால் வெடித்தது என்று குருமூர்த்தி கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் வெளிக்காற்றின் அழுத்தம் பட்டு கதவை திறக்கும்போது விபத்து ஏற்பட்டதாக குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொழிற்சாலையில்

அறைகள் சற்று தள்ளி, தள்ளி இருக்கும். வெடித்த அறையிலிருந்து கற்கள் தெரித்து சுற்றிலும் 4 பக்கமுமுள்ள அறைகளில் பட்டு விழுந்ததா என்று பார்த்தோமா என்று ஞாபகமில்லை. இந்த விபத்துக்குறித்து போலிசார் தனியாக வழக்குப் பதிவு செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும். குருமூர்த்திக்கு வழங்கப்பட்ட இழப்பீடுகள் பற்றி தெரியும், எவ்வளவு என்று தெரியாது. கோவிந்தராஜ் என்பவருக்கு இழப்பீடுகள் கொடுத்தார்களா என்றால் நிர்வாகத்தரப்பில் இருந்து கொடுத்தது தெரியும் ஆனால் எவ்வளவு என்று தெரியாது. முதல் தகவல் அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை. குருமூர்த்தியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றால் இல்லை. தொழிலாளர்களின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டிருந்தால் அவருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் தொழிற்சாலைக்குள் பணியின் போது விபத்து நடந்திருந்தால் கொடுத்துதான் ஆக வேண்டும். இந்த விபத்து குருமூர்த்தியின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றும், அது வெளியே தெரியவந்தால் அவருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு கிடைக்காது என்பதாலும், அவரது குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டும் என்ற நோக்கத்திலும் குருமூர்த்தியின் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு வேறு எந்த முக்கிய சாட்சிகளையும் விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக செயல்பட்டு வழக்குப்போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**